# கூட்டணியில் மேலும் கட்சிகள் சேரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

நிகழ்ச்சிகளுக்கும் செல்ல வேண்டிருக்கிறது. அதற்கேற்றாற்போல் பார்த்துக் கொண்டிருக்கிறேன். 234 தொகுதிகளைச் சேர்ந்தவர்களையும், நிச்சயமாக இதே அறிவாலயத்தில் அழைத்துச் சந்திப்பேன்.

**செய்தியாளர்:** *ஒவ்வொரு பூத்திலும் 30 சதவிகிதம் பேரை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்போது இளைஞர்கள் - இளம் பெண்களை கவரும் வகையில் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** நான் முதல்வன் என்ற திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் திட்டத்தின் மூலமாக சுமார் 40 லட்சம் பேருக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். இன்று கூட ஒரு பெரிய நிகழ்ச்சியை முடித்துவிட்டுதான் வந்திருக்கிறேன். மூன்று லட்சம் பேருக்கு அதில் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதில், 20000 ரூபாய், 1 இலட்சம், 2 இலட்சம், 3 இலட்சம் ரூபாய் சம்பளத்தில் எல்லாம் கூட வேலையில் சேர்ந்திருக்கிறார்கள்.

**செய்தியாளர்:** *ஓரணியில் தமிழ்நாடு - எவ்வளவு இலக்கு வைத்து உறுப்பினர்கள் சேர்க்கைக்குத் திட்டமிட்டு இருக்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** நாங்கள் ஒரு இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். ஒவ்வொரு தொகுதியிலும் 30 சதவிகிதம் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எங்களுக்கு வரும் செய்திகள் எல்லாம் 30 சதவிகிதம் அல்ல; 40 சதவிகிதம் சேர்ப்போம் என்று உறுதியும் கொடுத்திருக்கிறார்கள்.

**செய்தியாளர்:** *2026இல் எவ்வளவு சட்டப் பேரவைத் தொகுதிகளை இலக்காக வைத்திருக்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** நாங்கள் ஏற்கெனவே 200 தொகுதிகள் என்று சொல்லியிருக்கிறோம். அதைத் தாண்டிதான் வரும் என்று நினைக்கிறேன்.

### பிரதமரும் அமித்ஷாவும் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வரவேண்டும்!

**செய்தியாளர்:** இப்போது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் தனியாகவே மக்கள் பிரச்சினைகளைக் கேட்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்னும் நிறைய முகாம்களை நடத்த வேண்டும். தற்போது ஒரு நாள் மட்டுமே மக்கள் குறை தீர்வுக் கூட்டம் நடத்துகிறார்கள். தாசில்தார்கள் தாலுகா அலுவலகத்தில் இன்னும் நிறைய நடத்துவார்கள் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள்?

**மு.க.ஸ்டாலின்:** தற்போது அரசின் சார்பில், ஏற்கெனவே ஒவ்வொரு நகராட்சி, மாநகராட்சிகளுக்கு அனைத்து அலுவலர்களும் சென்று அங்கு ஒரு வாரம் தங்கி அங்கு மக்களின் குறைகளைக் கேட்டு அந்த இடத்திலேயே முடித்து கொடுக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு முகாம் முடிந்துவிட்டது. அதை இன்னும் 10 நாட்களில் மீண்டும் தொடங்குகிறோம். அப்போதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்டவர்களும் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து அளிக்கச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பணியையும் நிறைவேற்றுவார்கள்.

**செய்தியாளர்:** *வாக்களிக்காத மக்களுக்கும் இந்த அரசு வரவேற்பைத் தரும் வகையில் ஆட்சி அமைக்கும் என்று சொல்லியிருந்தீர்கள். தற்போது நான்காண்டுகள் நிறைவடைந்திருக்கிறது. மக்கள் மனதில் எப்படி இருக்கிறது?*

**மு.க.ஸ்டாலின்:** இந்த உரிமைத் தொகையைப் பொறுத்தவரை, தி.மு.க.வினர் மட்டும் வாங்கவில்லை. அனைத்துக் கட்சிகளில் இருக்கும் மகளிரும் பெற்று வருகிறார்கள். அதைத்தான் அப்போதே நான் சொன்னேன். பதவி ஏற்றுக்கொண்ட முதல் நாளிலேயே சொன்னேன். இந்த ஆட்சி, வாக்களித்தவர்கள் பெருமைப்பட வேண்டும். வாக்களிக்கத் தவறியவர்கள், இப்படிப்பட்ட கட்சிக்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்பட வேண்டும். அதுபோன்ற சூழலில்தான் ஆட்சியை நடத்துவேன் என்று சொன்னேன். நடத்திக் கொண்டிருக்கிறேன்.

**செய்தியாளர்:** *அண்மையில் அமித்ஷா அவர்கள் மதுரையில் பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்த போது, நான் இனி தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து வருவேன் என்று கூறினார். அது பற்றி?*

**மு.க.ஸ்டாலின்:** அமித்ஷா அடிக்கடி வர வேண்டும். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பிரதமரும் அடிக்கடி வர வேண்டும். வந்து பொய்யைப் பேசிவிட்டுச் செல்கிறார்கள். அது பொய் என்று மக்களுக்குத் தெரிகிறது. அது எங்களது தேர்தல் நேரத்தில் இலாபமாக அமையும். அதேபோன்று, இந்த கவர்னரை மாற்றக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். ஏன் என்றால், கவர்னர் மக்களுக்கு நல்லது செய்தாலும் இனி எடுபடாது. அந்தளவுக்கு கெடுதல் செய்து கொண்டிருக்கிறார். அதனால் அவர்களெல்லாம் அடிக்கடி வர வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டியளித்தார்.

# கல்லூரி மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் லேப்டாப் வழங்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இதனால் தான் 'தமிழ்நாட்டுக்கு வந்தால், திறமையான இளைஞர்கள் இருக்கிறார்கள்' என்ற நம்பிக்கையோடு ஏராளமான நிறுவனங்கள் தொடர்ந்து வருவார்கள். நீங்கள் அவர்களுக்கான நம்பிக்கை மட்டுமல்ல; நீங்கள்தான் தமிழ்நாட்டின் நம்பிக்கை! அந்த நம்பிக்கையோடுதான் "நான் முதல்வன்" என்று இந்த திட்டத்திற்கு நான் பெயர் வைத்தேன்! என் நம்பிக்கையைக் காப்பாற்றும் உங்கள் எல்லோருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரித்துக் கொள்கிறேன்!

**இத்திட்டத்தின் மூலம் இதுவரை 41 லட்சம் பேர் பயன்!**

இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் எல்லா மாணவர்களும் நன்றாக படிக்கிறீர்கள்.. நன்றாக மதிப்பெண்கள் பெறுகிறீர்கள். ஆனால், உங்கள் ஒவ்வொருவரின் தனித்திறன் என்ன? அதில் உங்களை 'அப்ஸ்கில்' (UpSkill) செய்வது எப்படி என்று சிந்தித்து உருவாக்கிய இந்த நான் முதல்வன் திட்டத்தால் இதுவரைக்கும் 41 இலட்சம் மாணவ - மாணவியர் பயனடைந்திருக்கிறார்கள். நல்ல வேலைவாய்ப்புகளை பெற்று உயர்ந்திருக்கிறார்கள்.

இந்த 'அப்ஸ்கில்'க்காக நீங்கள் அதிகம் பணம் கட்டி எந்த கோச்சிங் சென்டருக்கும் செல்ல வேண்டியதில்லை. உங்கள் காலேஜ் கேம்பஸிலேயே வளர்ந்து வரும் நவீன தொழில்துறைக்கு ஏற்றவகையில், தொழில்நுட்ப திறன், தகவல் தொழில்நுட்பம், மொழி அறிவு, Hackathons (ஹேக்கத்தான்ஸ்), Internship இதையெல்லாம் உள்ளடக்கி பயிற்சி அளிப்பது மூலமாக உங்கள் கனவுகளுக்கு சிறகுகளைத் தந்து, நான் முதல்வன் திட்டம் உங்கள் எல்லோரையும் இன்றைக்கு உயர்த்தி இருக்கிறது!

கடந்த இரண்டு, மூன்று மாதங்களில் நிறைய தேர்வுகளின் முடிவுகள் வந்தன. நான் முதல்வன் திட்டத்தில் படித்த பலருக்கு பெரிய பெரிய வாய்ப்புகள் உருவாகியிருக்கிறது! என்னுடைய ஃபேஸ்புக் எக்ஸ் - இன்ஸ்டாகிராம் இவைகளை எல்லாம் பார்த்தீர்கள் என்றால், ஏதோ நானே வெற்றிபெற்ற மாதிரியான மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருப்பேன்... மாதிரி என்ன...! உண்மையிலேயே, அது என்னுடைய வெற்றிதான்! தன் குடும்பத்தில் தன்னுடைய பிள்ளைகள் வெற்றி பெற்றால், ஒரு தந்தை அதை தன்னுடைய வெற்றியாகதான் கொண்டாடுவார்? அதனால்தான் உங்களை பார்க்கும்போது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி!

**போட்டித் தேர்வுகளில் வென்று அதிகாரிகளாக உருவாவீர்!**

பொதுவாகவே, எந்த ரிசல்ட் வந்தாலும் நான் அதிகாரிகளிடம் கேட்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன். அதில் குறிப்பாக "நான் முதல்வன்" திட்டத்தில் படித்தவர்கள் எத்தனை பேர்? இதில் எத்தனை பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள்?" என்றுதான் கேட்பேன்! கடந்த 3 ஆண்டுகளில், நான் முதல்வன் திட்டத்தால் 3 இலட்சத்து 28 ஆயிரத்து 393 மாணவர்கள், முன்னணி நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றிருக்கிறார்கள். இப்படி, திறன் மேம்பாடும், வேலைவாய்ப்பும் மட்டும் போதாது; போட்டித் தேர்வுகளில் வென்று, உயர்பதவிகளில், அரசு அதிகாரிகளாக நீங்கள் உருவாக வேண்டும் என்று நினைத்தோம்.

ஏனென்றால், 2016க்கு முன்னால், U.P.S.C. தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கும் மேல் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் தேர்வாகி இருந்தார்கள். ஆனால், இது படிப்படியாக குறைந்து, 2021இல் வெறும் 27 பேர்தான் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இந்த நிலையை மாற்ற, கடந்த 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் தேதி 'நான் முதல்வன்' போட்டித் தேர்வுகள் பிரிவை தொடங்கினோம்! அதில், 1000 பேரை தேர்வு செய்து ஒவ்வொரு மாதமும் ஏழாயிரத்து 500 ரூபாய் என்று பத்து மாதத்திற்கு 75 ஆயிரம் ரூபாய் கொடுத்து, முதல் நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றால், 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கினோம்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில், முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு அவர்களின் டெல்லிப் பயணம் மற்றும் சிறப்புப் பயிற்சிகளுக்கு ஊக்கத்தொகையாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தோம்! இதன் அவுட்புட் (Output) என்ன தெரியுமா?

இந்தாண்டு U.P.S.C கிளியர் செய்தவர்களின் எண்ணிக்கை, 57. அவர்களில் 50 பேர், நான் முதல்வன் மாணவர்கள்! இந்த வெற்றிக்கு பிறகு, அவர்கள் கொடுத்த பேட்டிகளில், தங்களின் வெற்றிக்குக் காரணமான நான் முதல்வன் திட்டத்தை குறிப்பிட்டு, எனக்கு நன்றி சொன்னபோது, எனக்குள் ஏற்பட்ட மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகளே இல்லை!

**இதுவரை ஒரு லட்சம் பேருக்கு திறன் பயிற்சி சான்றிதழ்!**

U.P.S.C மட்டுமல்ல, S.S.C, Bank தேர்வுகளுக்கும் ஆயிரம் பேரை தேர்ந்தெடுத்து, 510 பேரை டிரெயின் செய்ததில், 58 பேர் தேர்வாகியிருக்கிறார்கள்! இப்படி, மாணவர்களுக்கு மட்டுமல்ல, வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற மாதிரி பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர் களுக்கும் நான் முதல்வன் திட்டத்தில் முன்னணி தொழில்நிறுவனங்கள் மூலமாக பயிற்சி அளித்து, இதுவரைக்கும் ஒரு இலட்சம் பேருக்கு திறன்பயிற்சி சான்றிதழ் வழங்கியிருக்கிறோம்!

என்னைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாடு என்றால், சிறந்த கல்வித்தரம்! சிறந்த பயிற்சி! எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் உன்னதமான உயர்கல்வி! என்று எல்லோரும் சொல்ல வேண்டும்! அதை, இந்த நான் முதல்வன் திட்டம் சாத்தியப்படுத்தியிருக்கிறது! திறன் மேம்பாட்டை ஒரு Processஆக நினைத்து பயிற்சி கொடுக்கிறோம்! அதனால்தான், இந்த திட்டத்தில் திறன் போட்டிகளையும் நடத்துகிறோம்.

கடந்த ஆண்டு டெல்லியில், நடந்த இந்தியத் திறன் போட்டியில் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் 87 பேர் 61 பிரிவுகளில் கலந்து கொண்டு, 6 தங்கம் 8 வெள்ளி 9 வெண்கலம் 17 சிறப்பு பதக்கங்கள் என்று 40 பதக்கங்களை வென்று, இந்திய அளவில் மூன்றாவது இடத்தை பிடித்தார்கள்! அடுத்த ஆண்டு ஷாங்காய் நகரில் 'உலகத் திறன் போட்டிகள்' நடைபெறப் போகிறது. அதில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான 'தமிழ்நாடு திறன் போட்டிகள் 2025' பதிவுகள் இன்றைக்கு தொடங்குகிறது! நான் முதல்வன் தளத்தில் பதிவுசெய்து, இந்தப் போட்டியில் வெற்றிபெற உங்களை வாழ்த்துகிறேன்!

**வெற்றிகளுக்கான பல்வேறு திட்டங்கள்!**

இந்த வெற்றிகளுக்கான அடித்தளத்தை பள்ளிகளிலேயே நீங்கள் அமைக்க வேண்டும் என்றுதான் பள்ளி மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிந்து மெருகேற்றும் நான் முதல்வன், ஒலிம்பியாட் திட்டம், பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டும் கல்லூரிக் கனவுத் திட்டம் , சமூக - பொருளாதார காரணங்களால் பள்ளிக்கல்விக்கு மேல் படிக்க முடியாத மாணவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்ய உயர்வுக்குப் படி திட்டம், கிராமப்புற மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்க சிகரம் தொடு திட்டம், கல்லூரிக்கு செல்லும் அரசுப்பள்ளி மாணவ - மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் - இப்படி பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

அந்த வரிசையில்தான், இன்றைக்கு, 'வெற்றி நிச்சயம்' திட்டத்தையும் தொடங்கி வைத்திருக்கிறேன்! இந்த திட்டத்தைப்பற்றி சொல்ல வேண்டும் என்றால், உலகத்தரம் வாய்ந்த முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களோடு இணைந்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கும் 18 முதல் 35 வயதுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்கள் படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சிகள் வழங்க இருக்கிறது! இதற்கான பயிற்சித் தொகையையும் நம்முடைய திராவிட மாடல் அரசே ஏற்க இருக்கிறது!

**பின்தங்கிய வகுப்பினருக்கு ஊக்கத் தொகை!**

மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், இலங்கைத் தமிழர்கள், மீனவ இளைஞர்கள், சிறுபான்மையினர், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு இளைஞர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் என்று சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர்கள் அனைவருக்கும் அரசின் நலத்திட்ட பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் வழியாக கண்டறிந்து இந்தத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, 12 ஆயிரம் ரூபாய் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்படும்!

அதுமட்டுமல்ல, தொலைதூர மாவட்டங்களிலிருந்து, பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்கு, உணவுடன் கூடிய இருப்பிட வசதியும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்படும்! இந்த திட்டத்தில் சேர 'ஸ்கில் வாலட்' என்ற செயலியை உருவாக்கியிருக்கிறோம்! இந்த APPஇல், எந்த கம்பெனியில் வேலைவாய்ப்பு இருக்கிறது? அதற்கு என்ன பயிற்சி என்று எல்லா தகவல்களும் இருக்கும்!


இப்படி, தமிழ்நாட்டையே உயர்த்தும் உன்னதமான திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், 'நான் முதல்வன் திட்டம்' என் நெஞ்சுக்கு நெருக்கமான திட்டமாக இருக்கிறது! இன்றைக்கு பணி நியமனம் பெற்றுள்ள மாணவர்களுக்கும் நமக்கு துணை நிற்கும் தொழில் நிறுவனங்களுக்கும் மாணவர்களான உங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்! மாணவர்களான நீங்கள் வளர வேண்டும்; வளர்த்தெடுக்க வேண்டும் என்றுதான் ஏராளமான திட்டங்களை நாங்கள் இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

கல்லூரி மாணவர்களுக்கு இந்தாண்டு முதல் Laptop வழங்க இருக்கிறோம்! நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, கல்வியை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்; உங்களுக்கு சப்போர்ட் செய்ய நான் இருக்கிறேன்! நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது; நாங்கள் உருவாக்கி தரக்கூடிய வாய்ப்புகள் எல்லாவற்றையும் நீங்கள் பயன்படுத்தி, நான் முதல்வன் திட்டம் மூலமாக இன்னும் பல முதல்வர்கள் உருவாகவேண்டும்! உங்கள் வெற்றியை பார்த்து, உங்களைப் பெற்றவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியும், பெருமையும் அடைவார்களோ, அதே அளவு மகிழ்ச்சியையும், பெருமையையும் நானும் அடைகிறேன்!

**உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம்!**
**திறமை இருந்தால் வெற்றி நிச்சயம்!**
**உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்! வெற்றி நிச்சயம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக ஓரணியில் தமிழ்நாடு - கழக உறுப்பினர் சேர்க்கைத் திட்டம்!



### மாவட்டச் செயலாளர்- அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

**கழகத்தலைவர் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கைத்திட்டம் திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இன்று (03.07.2025 – வியாழக்கிழமை) மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தலைமையில், தொகுதி பார்வையாளர்கள், கிழக்கு தொகுதி பார்வையாளர் கதிரவன், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மணிராஜன், மணப்பறை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மருத்துவர் அண்ணாமலை மற்றும் மாவட்ட பார்வையாளர்கள் முன்னிலையில் கிழ்க்கண்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உறுப்பினர் சேர்க்கைத்திட்டத்தைநான் துவக்கி வைக்க உள்ளேன்.**

**மணப்பாறை தொகுதி** : 1.மணப்பாறை நகரம், 7 வது வார்டு, காலை 7.15 மணி,2. மணப்பாறை ஒன்றியம்சீகம்பட்டி ஊராட்சி7.45 மணி, 3. வையம்பட்டி வடக்குபழையகோட்டை ஊராட்சி காலை 8.15 மணி, 4. வையம்பட்டி தெற்கு ஒன்றியம் இளங்ககுறிச்சி ஊராட்சி காலை8.45 மணி, 5.மருங்கபுரி தெற்கு ஒன்றியம் காரப்பட்டி ஊராட்சி காலை9.00 மணி, 6.பொன்னம்பட்டி பேரூர் 7 வது வார்டு காலை9.15 மணி,

7.மருங்கபுரி மத்திய ஒன்றியம் முத்தால்வார்பட்டி ஊராட்சி காலை9.30 மணி, 8. மருங்கபுரி வடக்கு ஒன்றியம் இடையப்பட்டி ஊராட்சி காலை 9.45 மணி.

**திருவெறும்பூர் தொகுதி**: 1. திருவெறும்பூர் தெற்குஒன்றியம் குண்டூர் ஊராட்சி காலை 10.00 மணி, 2. திருவெறும்பூர் வடக்குஒன்றியம் வாழவந்தான்கோட்டை ஊராட்சி காலை 10.15 மணி,3. துவாக்குடி நகரம் 10 வது வட்டம்காலை 10.30 மணி, 4. கூத்தைபார் பேரூர் 11 வது வார்டு காலை 10.45 மணி, 5. திருவரம்பூர் பகுதி41அ வது வட்டம் காலை11.00 மணி, 6. காட்டூர் பகுதி43அ வட்டம்காலை11.15 மணி,7. பொன்மலை பகுதி45 வது வட்டம்காலை11.30 மணி.

**திருச்சி கிழக்கு தொகுதி** : 1.அரியமங்கலம் பகுதி35 வது வட்டம் காலை 11.45 மணி, 2. கலைஞர் நகர் பகுதி 59வது வட்டம்நண்பகல் 12.00 மணி, 2. பாலக்கரை பகுதி 30 வது வட்டம்நண்பகல் 12.15 மணி, 3. மார்கெட் பகுதி 20 வது வட்டம் நண்பகல் 12.30 மணி, 4. மலைகோட்டை பகுதி 13 அ வட்டம்நண்பகல் 12.45 மணி.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் மற்றும்மாவட்ட பார்வையாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி,ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட, மாநகர அணி அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, BDA தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர் - திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

## பா.ஜ.க.வின் கோரப்பிடியில் அ.தி.மு.க. சிக்கியுள்ளது!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

*சேலம், ஜூலை 3-*

*சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும். அமைச்சருமான இரா. இராஜேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்து கூறியதாவது:-*

கழகத் தலைவர் முதல்வரின் 'ஓரணியில் தமிழ்நாடு' முழக்கத்தை தொடங்கி வைத்துள்ளார்.

அதன்படி ஒவ்வொரு குடும்பத்தையும் நேரில் சந்தித்து ஒன்றிய பா.ஜ.க. அரசால் இழைக்கப்பட்டவர்களுக்கு எதிராக ஒரணியில் திரள வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்து. பா.ஜ.க. என்ற பாசிசத்தை வன்மத்தோடு. தமிழகத்தை பார்க்கிறது.

அதே சமயம் பா.ஜ.க.வின் கோரப்பிடியில் அ.தி.மு.க. சிக்கியுள்ளது.

*அதேபோல பல்வேறு மாநிலங்களில் இந்தியை திணித்து தாய் மொழியை அழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த துரோகத்தை தோலுரித்து காட்டு வதற்கு ஒரணியில் தமிழ்நாட்டு மக்கள் இயக்கம் இந்த மக்கள் இயக்கத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள் சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளில் 40 சதவீதம் பேர் தி.மு.க. உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். அதன் படி மாவட்டம் முழுவதும் 12லட்சம் பேர் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். மேற்கண்டவாறு பேட்டியளித்து கூறினார்.*



*உடன் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் (சேலம் கிழக்கு) டி.எம். செல்வகணபதி எம்.பி (சேலம் மேற்கு ) இருந்தனர்.*




நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நாகை அவுரிதிடலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் – தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் கோமல் எஸ்.ஆர்.விஜய் அறிவழகன், இளம் பேச்சாளர் பா.அருண்குமார், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா மாரிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, துணை அமைப்பாளர் தி.கலையரசன், நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன், துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, அருண், மணிகண்டன், சத்யா, செந்தில்குமார், வினோஷ், நாஜும், பிரவீன் பா.அருள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.